வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 08.10.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 282 | பக்கங்கள் : 12

# தமிழ் அரசு கட்சி தலைமை பதவியை துறந்தார் மாவை

## சுமந்திரன் அணிக்கு வலுக்கும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 08

**இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமை பதவி உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் விலகுகிறாரென மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார்.**



கட்சியின் பதில் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்யும் குழு நியமிக்கப்பட்டதும், மாவை சேனாதிராசாவுக்கு தெரியாமல் நடந்துள்ளது. கட்சிக்குள் தலைவரை ஓரம் கட்டி, எம். ஏ. சுமந்திரன் அணி ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளதையடுத்து, மாவை தனது கட்சித் தலைவர் பதவியை துறந்துள்ளார்.

இதேவேளை, இலங்கை தமிழ் அரசுக் கட்சி தலைவர் பதவிக்கு நடந்த தேர்தலில் தலைவராக தெரிவு செய்யப்பட்ட சி. சிறீதரன் அல்லது சிரேஷ்ட துணைத் தலைவர் சீ. வீ. கே.சிவஞானம் ஆகிய இருவரில் ஒருவர் கட்சியின் தலைமை பதவியை வகிக்க வேண்டுமென பதில் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மாவை சேனாதிராசா குறிப்பிட்டுள்ளார் எனவும் அறிய முடிகிறது. (எ)

## வடக்கு சுற்றுலா அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்

### ஜனாதிபதியிடம் வதிவிட பிரதிநிதி உறுதி

கொழும்பு, ஒக். 08

இலங்கையின் சுற்றுலா,வலுசக்தி மற்றும் சிறு தொழில்துறைகளின் அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமாரவின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மேம்படுத்த உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ இணக்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, ஆசிய 11

## நெல்லியடி ஆடையகத்துக்கு தீ வைத்தவர் வாளுடன் கைது

யாழ்ப்பாணம், ஒக்.

நெல்லியடி நகரிலுள்ள புடவையகத்துக்கு தீ வைத்த பிரதான சந்தேகநபர் காங்கேசன்துறை குற்ற தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி புடவையகத்துக்கு இரண்டு தடவைகள் தீ வைக்க முற்பட்ட நிலையில் அது முடியாமல் போயிருந்தது.

இந்நிலையில் மீண்டும் கடந்த 2ஆம் திகதி 11

## கட்டுமரம் கவிழ்ந்து மீனவர் பலி

வடமராட்சி, ஒக் 8

பருத்தித்துறை, தும்பளை கடல் கொந்தளிப்பால் கட்டுமரம் புரண்டதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் லூத்துமாதா 11

## மாவை அனுப்பிய கடிதம் எனக்கு கிடைக்கவில்லை

### தமிழ் அரசின் செயலாளர் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 08

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் தான் விலகுவதாக அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார். இருப்பினும், இது தொடர்பில் தனக்கு எந்தவித அறிவித்தலும் இன்னும் கிடைக்கவில்லை என்று கட்சியின் செயலாளர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த மாவை சேனாதிராசா, தான் 11

## விலகினார் சிவசக்தி!

வவுனியா, ஒக். 08

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல். எப். கட்சி ஜனநாயக தமிழ்த் 11

## த. தே. ம. முன்னணி வேட்புமனு தாக்கல்



யாழ்ப்பாணம், ஒக். 08

பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுவை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று யாழ். மாவட்ட தேர்தல் செயலகத்தில் தாக்கல் செய்துள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்னதாக நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபிக்குச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். 11

## ஈ. பி. டி. பி. யாழில் நேற்று வேட்புமனு



யாழ்ப்பாணம், ஒக். 08

டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனுவை தாக்கல் செய்தது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நேற்று தாக்கல் செய்தது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ். மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்சியின் செயலாளர் நாயகமும் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் முதன்மை 11


## தமிழர் இனப்பிரச்னைக்கு ஜே.வி.பி. தீர்வு தரும் என நான் நம்பவில்லை!

### செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டு

மன்னார், ஒக். 08

ஜே.வி.பி. தமிழ் மக்களின் இனப்பிரச்னையை தீர்க்கின்ற அல்லது தீர்த்து விடும் என்கிற நம்பிக்கை எனக்கில்லை. அவர்கள் தற்போது தேர்தல் ஆசனங்களைக் கூடுதலாக கைப்பற்ற வேண்டும் என்று சில நடவடிக்கைகளை எடுக்கின்றனர் என ரெலோ தலைவரும் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் 11

## ஜ. த. தே. கூட்டணியில் சசிகலா



யாழ்ப்பாணம், ஒக். 08

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

"ஒரு கல்லில் இரு மாங்காய்", என்று கூறுவார்கள். அதாவது, காய்த்து நிற்கும் மாங்காய் மரம் ஒன்றின்மீது ஒரு கல் எறிந்தபோது இரண்டு மாங்காய்கள் விழுந்தால் என்பதுபோல.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல்குழு ஒருதடவை கூடி, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்த தமது கட்சிக்காரர்களுக்கு எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்குவதில்லை என்று தீர்மானம் நிறைவேற்றியது. அந்தக் கூட்டத்திலேயே மற்றுமொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இதற்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல்களில் வெற்றியடையாமல் தோல்வியடைந்தவர்களுக்கும் நியமனம் வழங்குவதில்லை என்பது அந்த மற்றைய தீர்மானம்.

முதல் தீர்மானம் முக்கியமாக குறிவைத்தது சிறீதரனை. இரண்டாவது மாவையருக்கு வைக்கப்பட்ட பொறி.

இந்த இரண்டு தீர்மானங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்துவதென்றால், சிறீதரனுக்கும் போட்டியிட அனுமதி வழங்கியிருக்கக்கூடாது. ஆனால், அப்படி நடந்தால் என்ன நடக்கும் என்பதை சில தமிழ் அரசு முக்கியஸ்தர்கள் கூட்டம்போட்டு ஆராய்ந்திருக்கிறார்கள். சிறீதரன் கட்சியை விட்டு வெளியேறி சுயேச்சையாக போட்டியிட்டாலும் அவர் வெற்றிபெறுவார். "அவரது வாக்குகள் இல்லையென்றால், தமிழ் அரசு தேறாது", என்பது பலரின் கருத்தாக இருக்க, ஒன்றை கைவிட்டு விட்டு மற்றையதை மாத்திரம் கையில் எடுத்தாலே போதுமானது என்று ஆலோசனை வழங்க, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல ஒரு தீர்மானத்தை மட்டும் கையில் எடுத்திருக்கிறார்கள்.

அதாவது, ஏற்கனவே போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு இந்தத் தடவை போட்டியிட அனுமதி வழங்காவிட்டாலேயே, இந்த பொது வேட்பாளரை ஆதரித்தவர்கள் (சிறீதரன் தவிர்த்து) ஏனைய அனைவரும் 'அவுட்' ஆகிவிடுவார்கள். இதனாலேயே, பொது வேட்பாளரை ஆதரித்தவர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது என்றும் ஏற்கனவே கேட்டு தோற்றுப்போனவர்களை இம்முறை போட்டியிட அனுமதிக்காவிட்டாலேயே போதும் என்றும் முடிவெடுக்கப்பட்டுவிட்டது.

இந்த விடயங்களை தமிழ் அரசின் முன்னாள் எம். பி. ஒருவர் இந்த ஊர்க்குருவிக்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தார். அவர் பொதுவேட்பாளரை ஆதரித்தவர் மட்டுமல்ல, கடந்த முறை கேட்டுத் தோற்றுப்போன முன்னாள் எம். பி.

அவரிடம் கேட்டேன், "கடந்த பாராளுமன்ற தேர்தலில் கேட்டு தோற்றுப்போனவர்களுக்கு இந்தத் தடவை சந்தர்ப்பம் கொடுப்பதில்லை என்றால், கடந்த முறை கேட்டு தோற்றுப்போன திருகோணமலை குகதாசனுக்கும் கொடுக்கக்கூடாதே. அவரும் தோற்றவர்தானே? சம்பந்தன் ஐயா இன்றும் உயிருடன் இருந்திருந்தால், அவர் எம். பி. ஆகியிருக்கமாட்டார்தானே?". அவர் உடனே சொன்னார், "அட எனக்கு இந்த யோசனை வரவில்லையே" என்று.

இதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது:

தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்தவர்களை பழிவாங்கத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்பது சிறுகுழந்தைக்கும் தெரிந்த விடயம். ஆனால், தமது கட்சியின் வருங்காலத் தலைவரே பொதுவேட்பாளரை ஆதரிக்க முடிவெடுத்த பின்னர், கட்சியின் தற்போதைய தலைவரும் தமிழ் அரசின் தலைவர்களிலேயே இன்றும் உயிரோடு இருப்பவர்களில் மூத்தவருமான மாவை சேனாதிராசாவே, தான் தனது வாக்கை பொது வேட்பாளருக்குத்தான் போடுவேன் என்று பகிரங்கமாகக் கூறி ஆதரவு தெரிவித்த பின்னர், அவர்கள் வழியில், அதாவது, மூத்த தலைவர், வருங்கால தலைவர் இருவரினதும் வழியில் செல்ல முற்பட்ட தலைவர்கள்- அவர்கள் கடந்த தேர்தலில் வெற்றிபெறவில்லை என்றாலும் இந்தத் தேர்தலில் வெற்றிபெறக்கூடியவர்களை போட்டியிட முடியாதவாறு தடுத்து வைத்திருக்கின்றபோது, அதனை கண்டும்காணாமல், தான் போட்டியிட சந்தர்ப்பம் வந்துவிட்டதுதானே என்று சிறீதரன் கண்டும்காணாமல் கடந்து செல்வது ஓர் ஆளுமையுள்ள தலைவருக்கு சரியானதாக இருக்காது.

இந்த விடயத்தில் தன்னோடு இருந்தவர்களை- தன் அடியொற்றி அரசியலில் நடந்தவர்களை கண்டும் காணமல் நகர்ந்துசெல்வது அவரது ஆளுமைமீதே கேள்வி எழுப்பும் என்பதையும் அவர் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தப் பத்தியை எழுதி முடித்த பின்னர்தான் தமிழ் அரசின் யாழ்ப்பாண பட்டியல் வெளியாகியிருந்தது. அதில் முன்னாள் யாழ். முதல்வர் ஆனல்ட் பெயரும் இடம்பெற்றிருப்பதை கண்டபின்னர் தமிழ் அரசின் முக்கிய நபர் ஒருவரிடம் கேட்டேன். கடந்த தேர்தலில் போட்டியிட்டு தோற்றவர்களுக்கு இடம் இல்லையெனில் அவருக்கு எப்படி? என்று. அவர் அதற்கு புது விளக்கம் ஒன்று தந்தார்: "ஏற்கனவே எம்.பியாக இருந்து போட்டியிட்டு தோற்றவர்களுக்குத்தான் நியமனம் இல்லை" என்று.

"இரண்டாயிரத்து பதின்மூன்றுக்கு பின்னர் நடந்த தேர்தல்களில் எல்லாம் (நல்ல வேளை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசு போட்டியிடவில்லை) தமிழ் அரசின் வேட்பாளர் பட்டியலில் ஆனல்ட்டுக்கு இடம் கொடுக்கப்படுகிறதே. தமிழ் அரசுக்கு ஆட்களுக்கு அத்தனை தட்டுப்பாடா? அல்லது சேருக்கு விருப்பு வாக்குக்கு உதவக்கூடியவர் என்பதாலா?" என்று அவரிடம் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

- ஊர்க்குருவி

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவரங்கம் யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஒக். 08

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த தூது தனிநாயகம் அடிகள் நினைவரங்கம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது.

தமிழ் சங்க உபதலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகள், தமிழ்ச் சங்கத்தின் பெருந் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் மாலைகளை அணிவித்தனர்

தமிழ் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தொடக்க உரையாற்றினார். தமிழ் சங்க பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து மாணவர் உரை இடம்பெற்றது. தனிநாயகம் எங்கள் தமிழ் நாயகம் என்ற பொருளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி குரு மாணவன் ஆண்டனி குமார் அனோஜ் உரையாற்றினார்.

சிறப்பு நிகழ்வாக இலங்கை பல்கலைக் கழக முறைமையில் சேர் பொன். அருணாசலத்தின் வகிபாகம் என்ற பொருளில் யாழ்ப்பாண பல்கலைக் கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா நினைவுப் பேருரை ஆற்றினார்.

இவருக்கான அறிமுக உரையை தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் சந்திரமௌலீசன் லலீசன் மேற்கொண்டார். திருமறை கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோன்சன் ராஜ்குமார் கருத்துரை வழங்கினார்.



நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், திருமறைக் கலாமன்ற உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், குருமாணவர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (அ)

## கலாசாலையில் ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 08

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரியர் மாணவர் மன்றம் நடத்திய சர்வதேச ஆசிரியர் தினவிழா கடந்த சனிக்கிழமை காலை கலாசாலையின் ரதி லட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும், பிரதி அதிபரும் இலங்கையின் புகழ்பூத்த பரதநாட்டிய கலைஞருமாகிய கலா கீர்த்தி சாந்தினி சிவநேசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.



நிகழ்வில் கலாகீர்த்தி சாந்தினி சிவனேசனுக்கு நூற்றாண்டு கௌரவம் வழங்கப்பட்டதோடு அவரது ஆளுமைச் சிறப்பிதழாக வெளிவந்த கலாசாலையின் கலாதீபம் ஒக்ரோபர் மாத இதழின் சிறப்பு பிரதி கையளிக்கப்பட்டது.

ஆசிரிய மாணவர்கள் வழங்கிய கவியரங்கம் நாடகம், முதலிய சிறப்பு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (அ)

## சர்வதேச ஆசிரியர் தினம் மன்னாரில் கொண்டாட்டம்

மன்னார், ஒக். 08

அகில இலங்கை முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் மன்னார் கிளை ஏற்பாடு செய்த சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு நேற்று முன்தினம் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகர பிரதேச செயலாளர் எம். பிரதீப், மன்னார் முன்னாள் உதவி கல்வி பணிப்பாளர் ராபி அஸ்லம், கல்வி அபிவிருத்திக்குழு காப்பாளர் நடராசா சச்சிதானந்தன், மன்னார் வலய ஆசிரிய ஆலோசகர் அன்ரன் ரமேஷ், மன்னார் நகர சபையின் செயலாளர் எஸ். லோகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக மன்னார் பேராலய பங்குத்தந்தை அருட்தந்தை சுரேந்திரன் ரெவல், முருங்கன் விகாராதிபதி வல்பொல சரண தேரர், உப்புக்குளம் ஜும்மா பள்ளி மௌலவி ஜனாப் ஏ.சீமாக், நானாட்டான் செல்வமுத்து மாரியம்மன் ஆலய குரு எஸ். கனகராஜா குருக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது இருநூறுக்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், நீண்டகால சேவையாற்றிய முன்பள்ளி ஆசிரியர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (அ)

## கிளிநொச்சியில் தேங்காய் விலை உச்சம் தொட்டது

கிளிநொச்சி, ஒக். 08

கிளிநொச்சி மாவட்டத்தில், தேங்காய் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதற்கமைய ஒரு தேங்காய் 120 ரூபாய் முதல் 140 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

நோய்த் தாக்கம் மற்றும் கடும் வறட்சி காரணமாக, தேங்காய் உற்பத்தி குறைவடைந்துள்ளன. அத்துடன், தென்னை மரங்கள் அழிவடைந்து வருவதாகவும் தென்னைச் செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக, சந்தைக்கு வரும் தேங்காய் குறைவடைந்த நிலையில் விலை அதிகரித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.10.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலில் பழையவர்கள்

பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் நியதி. இந்த நியதியை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் உண்டு. இதனை மறுக்கின்றபோது நிலைமைகள் புத்தாக்கம்மிக்கனவாக இருக்கப் போவதில்லை. தேர்தல் என்றவுடன் பலர் போட்டியிட முனைவதுண்டு. அதில் தவறில்லை ஆனால், எப்போதும் நாங்கள் மட்டும்தான் போட்டியிட வேண்டுமென்று அடம்பிடிப்பதுதான் தவறானது. கேட்டால் நாங்கள் நாற்பது வருடங்கள் அரசியலில் இருக்கின்றோம் என்று சிலர் கூறுவதுண்டு.

இங்கு ஒருவர் அரசியலில் எத்தனை வருடங்கள் இருக்கின்றோம் என்பதல்ல, முக்கியமானது. ஆனால், அவர் எவ்வாறான அரசியல் மரபொன்றை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்கின்றார் என்பதுதான் முக்கியமானது. அப்படிப் பார்த்தால் தற்போதுள்ள மூத்த அரசியல்வாதிகள் என்போர் பலர் அவ்வாறான தகுதிநிலையில் இல்லை. ஆனால், அவர்களது பாராளுமன்றம் செல்ல வேண்டுமென்னும் போதை மட்டும் அடங்கவில்லை.

இம்முறை தேர்தல் களம் முற்றிலும் வித்தியாசமானதாக இருக்கப்போகின்றது. இந்த அலையில் யார் யாரெல்லாம் அள்ளுண்டு போகப்போகின்றனர் என்று தெரியவில்லை ஆனால், நிச்சயமாக பலர் தோற்கப்போவது நிச்சயமானது. இந்த கள யதார்த்தத்தை பலர் புரிந்து கொள்ளவில்லை - ஆனால், ஆகக்குறைந்தது புரிந்துகொள்ள முயற்சிப்பதாகக் கூடத் தெரியவில்லை.

தமிழ்த் தேசிய அரசியலின் பழைய சுலோக வகைப்பட்ட அணுகுமுறைகளின் காலம் முடிந்துவிட்டது. தேசியமும் முக்கியம் அதேவேளை அதனை புதிய அணுகுமுறைகளால் முன்னெடுக்க வல்லவர்களே இப்போது தேவையானது. ஏற்கனவே அரசியலில், தங்களை அனுபவசாலிகள் என்று அடையாளப் படுத்தியிருப்பவர்கள் பலரின் அணுகுமுறைகள் அனைத்துமே படுமோசமான தோல்வியை சந்தித்திருக்கின்றது. இந்த நிலையில் அவ்வாறானவர்கள் தங்களை தொடர்ந்தும் தகுதியுள்ளவர்களாக அடையாளப்படுத்துவதை இனியும் மக்கள் சகித்துக்கொள்ளப் போவதில்லை.

இளைய தலைமுறையினர் தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து தொடர்ந்தும் விலகிச் செல்கின்றனர். அவர்கள் தமிழ்த் தேசிய அரசியலில்தான் இருக்கின்றனர் என்பதும் சந்தேகமானது. ஓர் அரசியல் போக்குக்குள் புதிய தலைமுறையினரை கட்டிப் போட முடியாமல் போனால், குறித்த அரசியல் போக்கு அரை உயிரில் தான் இருப்பதாகக்கொள்ள முடியும். பழைய முகங்களை முன் வைத்து முன்னெடுக்கப்படும் உயிர்ப்பற்ற அரசியல் செயல்பாடுகளால் மிகுதியிருப்பதும் காலப்போக்கில் இல்லாமல் போய் விடும்.

தமிழ்த் தேசிய அரசியலின் இன்றைய நிலைமை இதுதான். இந்த நிலைமையை மாற்றுவது என்பது சவாலானது. இன்று அரசியலை தீர்மானிப்பதாக தங்களை தாங்களே கூறிக்கொள்ளும் பலர் இந்த அரசியல் யதார்த்தத்தை புரிந்துகொள்ளும் கடப்பாட்டை வேண்டுமென்றே மறுதலிப்பவர்களாகவே இருக்கின்றனர். ஒரு கொள்கைசார் அரசியல் என்பது, அஞ்சலோட்டம் போன்றது ஆனால், அஞ்சல் கோல் முறையாக மற்றவரிடம் கையளிக்கப்பட்டால் மட்டும்தான், அஞ்சலோட்டம் தொடரும்.

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் உதவி திட்டங்களும் ஆன்மீக அருளுரையும்



வடமராட்சி, ஒக். 07

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண் பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் நடைபெறும் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் முன்னிலையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினர் சிவாநாதன் தலைமையில் கடந்த 4ஆம் திகதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் முருக வழிபாடு என்ற தலைப்பில் ஆன்மீக அருளுரையினை வவுனியா தேசிய கல்லியியல் கல்லூரி ஓய்வு பெற்ற விரிவுரையாளர் திருமதி விஜயகுமாரி முருகேசம் பிள்ளை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து உதவித் திட்டங்களாக அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய கோரிக்கைக்கு அமைவாக, நவராத்திரி விழா போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்குவதற்கான நிதியாக ரூபா 20,000 வழங்கி வைக்கப்பட்டதுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வரலாற்றுத்துறை பகுதியினரின் கோரிக்கைக்கு அமைவாக, கலாசார ஆய்வுக்கான நிதியாக 50,000 ரூபாவும் வழங்கப்பட்டன.

இதேவேளை,

வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி 04ஆம் வடடாரம், முள்ளியவளையை சேர்ந்த, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன்,

அச்சுவேலியை சேர்ந்த அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருத்திக்கும், முன்னாள் போராளி ஒருவருக்குமாக நான்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர், தொண்டர்கள், சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், அடியவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ-02)

# முல்லை. மாணவி வரலாற்று சாதனை



முல்லைத்தீவு, ஒக். 08


கண்டி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான வூசோ குத்துச் சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாணவர்கள் இருவர் தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி ஜூட் வசீகரன் டிவோன்சி 18 வயதுக்குட்பட்ட 60-65 கிலோ எடைப்பிரிவில் தங்க பதக்கத்தையும் முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவன் நாகேஸ்வரன் கோபிகன் 20 வயதுக்குட்பட்ட 70-75 கிலோ எடைப்பிரிவில் வெண்கல பதக்கத்தையும் வென்று வரலாற்று சாதனை படைத்து பாடசாலைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

குறித்த மாணவர்கள் பயிற்றுவிப்பாளர் தேசிந்தனின் பயிற்றுவிப்பில் தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை பெற்று வடமாகாணத்திற்கு வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

குறித்த மாணவி இரத்தினபுரி நியூ டவுன் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தைக்வொண்டோ போட்டியில் 18 வயது பிரிவில் 59-63 கிலோ எடைப்பிரிவில் வெண்கல பதக்கம் வென்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 08 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 22
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சஷ்டி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் வரும். சக ஊழியர்களை உதாசின படுத்த வேண்டாம்.

**இடபம்**
கடினமான வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். சகோதரர் வகையில் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். விவாதம் வேண்டாம்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்கள் நிறைவேறும். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**கும்பம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

# மக்கள் ஆணையை மீறியவர்களுக்கு மக்களே தேர்தலில் பாடம் புகட்டுவர்

## ரிஷாத் பதியுதீன் கூறுகிறார்

மன்னார், ஒக். 08

கட்சியில் இருந்து விலக்கப்பட்டவர்கள் மற்றும் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தவர்கள் உள்ள கூட்டணியில் இணையப்போவதில்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் நேற்று முன் தினம் மன்னார், மாந்தை பிரதேசத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே ரிஷாத் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தவறு செய்தமைக்காக கட்சியிலிருந்து விலக்கப்பட்ட சிலர், இன்று தாமாகவே கட்சியிலிருந்து வெளியேறியதாகக் கூறித் திரிகின்றனர். தவறு செய்தவர்கள் உடனடியாக கட்சியிலிருந்து நீக்கப்படுவர். இவ்வாறு தவறு செய்த மூன்று எம். பிக்களை எமது கட்சி நீக்கியுள்ளது.

இதுபோலவே, கிண்ணியாவைச் சேர்ந்த ஒருவரையும் நாம் நீக்கியுள்ளோம். இன்று அவர் ரணிலுடன் இணைந்துள்ளதோடு மட்டுமல்லாமல், அவர் தாமாகவே கட்சியிலிருந்து வெளியேறியதாக ஊடகங்களுக்கு கூறுகிறார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது கட்சி அம்பாறை மாவட்டம் உட்பட பல மாவட்டங்களில் போட்டியிடும். சில மாவட்டங்களில் தனித்தும் இன்னும் சில மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் போட்டியிடும். எம்மால் நீக்கப்பட்டவர்களைச் சேர்த்து உருவாக்கப்படும் கூட்டணியில் நாம் சேரமாட்டோம்.

20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்து ஜனாஸாக்களை எரிப்பதற்கு உதவியவர்கள் உள்ள கூட்டணியிலும் எமது கட்சி இணையாது. அம்பாறை மாவட்டத்தில், இவ்விடயமே இழுபறியிலுள்ளது-என்றார்.

# பரு. பிரதேச செயலக மண்டபத்தில் திடீரென ஏற்பட்ட மின்னொழுக்கு

வடமராட்சி, ஒக். 8

பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டப கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் ஏற்பட்ட மின்னொழுக்கு சொற்ப நேரத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களுக்கான பிரதேச நாள் கூட்டம் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மின்விளக்குகளின் ஒளி குறைவடைந்ததைக் கண்ட ஊழியர்கள் வெளியே வந்து பார்த்த போது மின்னொழுக்கு ஏற்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து உடனடியாக பணியாளர்களால் மின்னொழுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதேநேரம் மின்சார சபை ஊழியர்களும் வந்து மின்னொழுக்கை சீர்செய்தனர்.

மின்னொழுக்கு ஏற்பட்ட வேளை உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மண்டபத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். (எ-02)

# யோக கலை பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 08

உலக சமாதான ஆலயத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இலவச யோகக் கலை பயிற்சி வகுப்புக்கள் யாழ். இணுவில் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்த பயிற்சி வகுப்பு பிரதி சனி, ஞாயிறுக்கிழமைகளில் மாலை 5 மணி முதல் 6 மணி வரை நடைபெறவுள்ளன.

தொடர்ந்து நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்புகளில், யோகக்கலை பற்றிய விளக்கமும், நோய்கள் குணமாக என்னென்ன யோகாசனங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும் யோகக்கலையுடன் தியான பயிற்சியை மேற்கொள்வது தொடர்பிலும் விரிவான விளக்கங்கள் வழங்கப்படும்.

யோகா பயிற்சிகளை கலாநிதி பா. சுதாகரன் வழங்கவுள்ளார். இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்பவர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சிறியவர் முதல் பெரியவர் வரை ஆண், பெண் இரு பாலாரும் கலந்து கொள்ளலாம். பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள நாட்டமுள்ளவர்கள் 077 960 3001, 076 023 3301 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு, மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் - முன்பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வல்வை மகளிர் கல்லூரியில் ஆசிரியர் தின நிகழ்வுகள்

வடமராட்சி, ஒக். 08

வல்வை மகளிர் கல்லூரியின் ஆசிரியர் தின விழா கல்லூரியின் கேட்போர் கூடத்தில் பாடசாலை மாணவ தலைவியின் தலைமையில நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஆசிரியர்களை மாணவர்கள் கௌரவப்படுத்தினர். அத்துடன், ஆசிரியர்கள் நடத்திய விவாத மேடை, நிகழ்ச்சி, ஆசிரியர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.



இதில் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உட்பட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# 2 மாற்றுத்திறனாளிகளுக்கு மின்சார சக்கர நாற்காலிகள்

முல்லைத்தீவு, ஒக். 08

முல்லைத்தீவு, மாங்குளத்தில் மாற்றுத் திறனாளிகள் இருவருக்கு மின்சாரத்தில் இயங்கும் சக்கரநாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாற்றுத் திறனாளிகள், சக்கரநாற்காலிகள் இன்மையால் சிரமத்துக்கு உள்ளாகியிருந்தனர். அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக, சமூக நலனுக்காக சேவைகளை வழங்கி வரும், நோர்த் ஈஸ்ட் பீப்பிள் வெல்பெயார் அஷோசியேசன் எனும் தொண்டு நிறுவனத்தால் மின்சார சக்கரநாற்காலிகள், திருகோணமலை மற்றும் கிளிநொச்சியை சேர்ந்த இருவருக்கு வழங்கப்பட்டன.

ஏ - 9 வீதி, மாங்குளத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து இவ்வாறு உதவி வழங்கப்பட்டது.

நிர்வாக பொறுப்பாளர் சத்தியசீலன் சத்தியராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாற்றுத்திறனாளி அமைப்பினர், நிறுவன ஊழியர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் சங்கத்தினர், பொது மக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதி ரணிலின் பாதுகாப்பு விலக்கப்படவில்லை!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, ஒக்.08

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் முற்றிலும் பொய்யானவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**



முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 50 அதிகாரிகள் உட்பட பாதுகாப்பு தரப்பினர் தொடர்ந்தும் செயற்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் விளக்கமளிக்கும்போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ இவ்வாறு தெரிவித்தார்.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை விரைவில் தீர்மானிக்கப்பட்டு நிறுவப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவை ஸ்தாபிப்பதற்கு தேவையான அதிகாரிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக அதிகாரிகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஜப்பானுக்கான இலங்கை தூதுவர் அந்நாட்டு பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு, ஒக். 08

இலங்கையின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு அநுரகுமார திஸாநாயக்க இரண்டு தேர்தல்களில் மாத்திரமே போட்டியிட வேண்டியிருந்ததாகவும் தாம் ஜப்பானின் பிரதமராவதற்கு ஐந்து தடவைகளாக போட்டியிட வேண்டியேற்பட்டதாகவும் ஜப்பான் பிரதமர் சிகெரு இசிபா தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் ரொட்னி பெரேராவை ஜப்பானிய பாராளுமன்றில் சந்தித்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு தமது வாழ்த்துக்களையும் ஜப்பான் பிரதமர் தெரிவித்தார்.

அநுரகுமார முதல் தடவையில் தெரிவு செய்யப்படவில்லை என்பது மோசமானதல்ல என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மண்சரிவு அபாய எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 08

கேகாலை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு முதல் நிலை மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் காலி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டாம் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

மழையுடனான காலநிலை நிலவிவரும் நிலையில் குறித்த பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# திரிபோஷ நிறுவனத்தை கலைக்கக்கூடாது அரசு!

## ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு பொதுச்சேவை ஊழியர் சங்கம் கடிதம்

கொழும்பு, ஒக். 08

இலாபம் ஈட்டும் பொது நிறுவனமான திரிபோஷ நிறுவனத்தினை கலைக்கவோ அல்லது வேறு நிறுவனங்களுடன் இணைக்கவோ வேண்டாம் என சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொது சேவை ஊழியர் சங்கம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

2024 செப்ரெம்பர் 27 ஆம் திகதி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், இலங்கை திரிபோஷ நிறுவனம் கலைக்கப்படுவதற்கு அல்லது ஏனைய நிறுவனங்களுடன் இணைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் திரிபோஷ நிறுவனம் வருடாந்த இலாபம் ஈட்டும் வர்த்தக நிறுவனங்களில் ஒன்றாக உள்ளதாகவும், 2020 ஆம் ஆண்டில் கொரோனா தொற்று உச்சத்தில் இருந்த போது திரிபோஷ நிறுவனம் 100 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலாபங்களைப் பெறுவதற்கு மேலதிகமாக, திரிபோஷ நிறுவனம் அரசாங்கத்தினால் பேணப்பட வேண்டியது மிகவும் அவசியம் எனவும், பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்துக்கான பங்களிப்பாகக் கருதப்பட வேண்டும் என்றும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இலங்கையை முதலிடம் பெறச்செய்வதே ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்கு

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 08

இலங்கையை, உலகில் முதலிடம் பெறச் செய்வதே ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்குப் பார்வை என கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியாக பின்னடைவைச் சந்தித்தாலும் நாட்டுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஹோமாகம தேர்தல் தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எரந்த வெலியங்கவின் ஏற்பாட்டில் கட்சி செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் ஆசீர்வாதத்தின் அடிப்படையில்தான் ஜனநாயகப் பயணம் முன்னெடுக்கப்படுகிறது.

நாட்டை வெல்வதே முதன்மையானதாக அமைய வேண்டும். இந்த அரசியலின் மூலம் நாட்டைப் பலப்படுத்துவதாகவும், 220 இலட்சம் மக்கள் பாதுகாக்கப்பட்டு அனைத்துப் பிரஜைகளும் பாதுகாக்கப்பட்டு வளமான நாடு உருவாக்கப்பட வேண்டும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கரைச் சந்தித்தபோது இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டோம். வங்குரோத்தடைந்த சந்தர்ப்பத்தில் இருந்து ஒரு நாடாக இந்தியா பெரும் உதவிகளை வழங்கியுள்ளது. அவருக்கு நன்றி தெரிவித்து, மேலும் ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொண்டோம்.

இந்த நாட்டுக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறும், இந்தியாவில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களிடம் நமது நாட்டில் தொழிற்சாலைகளை நிறுவவும், தகவல் தொழில்நுட்பத் துறையில் இந்திய முதலீடுகளை அதிகரிக்குமாறும் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தோம்.

நாம் இன்னும் வங்குரோத்தடைந்த நிலையிலேயே இருக்கிறோம். கடன்களை அடைக்க முடியாத ஒரு நாடாகவே உள்ளோம்.

2028 ஆம் ஆண்டுக்குள் மீண்டும் கடனை செலுத்த வேண்டும். எனவே நாட்டின் வளர்ச்சிக்காக எப்பொழுதும் முன்நிற்க வேண்டும்.



இதற்கான அதிகபட்ச பணிகளை மேற்கொள்ளவேண்டும். இலங்கையை உலகில் முதலிடம் பெறச் செய்வதே ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்குப் பார்வையாகும். இதற்காக பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு துறையிலும் முன்னேறி, பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். நமக்கு நெருக்கமான இந்தியாவின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மக்கள் அவதிப்படும் நம் நாட்டில் வறுமையைப் போக்க தெளிவான வேலைத் திட்டத்தை கொண்டிருக்க வேண்டும்.

ஏற்றுமதி சார்ந்த தொழில் முறையொன்று உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் இளைஞர்களின் தொழில் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படும்-என்றார். (அ)


# விவசாய பொருட்களின் உற்பத்தி குறைவடைவு!

கொழும்பு, ஒக். 08

இலங்கையில் விவசாயத் துறையில் ஒரு வருடத்திற்குள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் தமது வேலைகளை விட்டுச் சென்றுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் இதனை உறுதிப்படுத்தி உள்ளது.

இந்த நாட்டில் விவசாயத் துறையில் நிலவும் பல்வேறு பிரச்னைகளால் விவசாய வேலைகளை விட்டு மக்கள் வெளியேறுவதுடன் நாட்டிற்கு



தேவையான விவசாய பொருட்களின் உற்பத்தியும் குறைவடைந்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலை நீடித்தால் நாட்டின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# அபுதாபியிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக சிகரெட்கள்!

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருவர் கைது

கொழும்பு, ஒக். 08

அபுதாபியிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளையைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய பெண் மற்றும் பாணந்துறை பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய ஆண் என இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான பெண்ணிடமிருந்து 24 ஆயிரத்து 200 சிகரெட்டுகளும் மற்றைய நபரிடமிருந்து 24 ஆயிரத்து 600 சிகரெட்டுகளும் கைப்பற்றப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் திட்டங்களை நிறுத்தினால் ஆபத்து!

## நிமல் லான்ஸா எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 08

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் சென்ற பொருளாதார திட்டங்களை நிறுத்தினால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா தெரிவித்துள்ளார்.**



நீர்கொழும்பு வெல்லவீதிய காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மற்றும் அவரது பொருளாதார குழு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்தது. தேர்தலுக்கு முன், சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்துடன் செல்ல முடியாது எனக் கூறினர்.

அதில் திருத்தங்களை மேற்கொள்வோம் என்றும் மக்களுக்கு உறுதியளித்தனர்.

அந்த ஒப்பந்தம் நாட்டுக்கு பயன்படாது என்றும் கூறினர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்தபோது, அதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

அவ் ஒப்பந்தம் நாட்டு மக்களுக்கு நல்லதல்ல என்றும் தாம் ஆட்சிக்கு வந்ததும் அதனை இரத்து செய்வதாகவும் குறிப்பிட்டனர்.

இவ்வாறு அவர்கள் தேர்தலுக்கு முன்னர் கூறிய விடயங்களை செய்யாமலிருப்பது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த பொருளாதார வேலைத்திட்டத்தில் ஒரு எழுத்தைக் கூட மாற்ற முடியாது என்பதை நாம் அறிந்திருந்தோம்.

அதனை இன்று ஜே.வி.பி ஏற்றுக் கொண்டிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டங்கள் ஒரு வாரத்தில் முன்னெடுக்கப்பட்டவையல்ல.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வரும் வெற்றிகரமான திட்டமாகும்.

மத்திய வங்கியின் ஆளுநர், திறைசேரியின் செயலாளர் மற்றும் பொருளாதாரக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட நீண்ட வேலைத்திட்டமாகும்.

மத்திய வங்கியின் ஆளுநரும், திறைசேரி செயலாளரும் பொருளாதாரத்தை வீழ்த்துபவர்கள் என விமர்சித்தனர்.

ஆனால் அவர்கள் தான் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் உதவிக் கொண்டிருக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் முன்னெடுத்த திட்டத்தைக் கைவிட்டால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும்.

நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக இந்த விடயங்கள் மூடி மறைக்கப்பட்டாலும், தேர்தலுக்குப் பிறகு, சர்வதேச நாணய நிதியம் ஏராளமான சீர்திருத்தங்களை முன்மொழியும்.

நாம் கடந்த ஒன்றரை ஆண்டுகள், சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்துடன் இணைந்து பணியாற்றிய போது ஜே.வி.பி, ஒரு நாள் கூட ஒத்துழைக்க வில்லை.

எப்போதும் எதிராகவே செயற்பட்டனர்.

எவ்வாறிருப்பினும் இந்த அரசாங்கம் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தல், சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துதல், வர்த்தகப் பற்றாக்குறையைத் தீர்ப்பது, அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு போன்றவற்றை முன்னெடுப்பது அவசியமாகும்.

மார்ச் மாதத்திற்குப் பின் வழங்கிய வாக்குறுதிகளை இவர்கள் நிறைவேற்ற வேண்டும்-என்றார்.

(அ)

# வருடத்தின் முதல் 9 மாதங்களில் ரூ. 1,417 பில்லியன் வரி வசூல்!

## இது வருடத்தில் இலக்கிடப்பட்ட வருமானத்தின் 70 சதவீதமாகும்

கொழும்பு, ஒக். 08

இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில் ஆயிரத்து 417 பில்லியன் ரூபா வரி வசூலிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அது இந்த வருடத்தில் இலக்கிடப்பட்ட வருமானத்தின் 70 சதவீதமாகும் என இறைவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வரி செலுத்தாத நபர்களை அடையாளம் கண்டு, அவர்களிடமிருந்து வரிகளை வசூலிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

(அ)

# கொழும்பில் பெண் படுகொலை!

கொழும்பு, ஒக். 08

கொழும்பு, செக்கவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெக்னிக்கல் சந்தி பகுதியில் நேற்று அதிகாலை பெண்ணொருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

32 வயதான குறித்த பெண் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்துள்ள பெண்ணுக்கும் மற்றுமொரு நபருக்கும் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகவும், கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

(அ)

# தேங்காய் விலை மேலும் உயர்வு!

கொழும்பு, ஒக். 08

சந்தையில் தேங்காய் விலை மேலும் அதிகரித்துள்ளது.

சில பிரதேசங்களில் தேங்காய் ஒன்று 180 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் தெரிவித்தனர்.

கடந்த காலத்தில் ஒரு தேங்காய் 90 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்கப்பட்டது.

இதேவேளை, கடந்த சில நாட்களாக வீழ்ச்சியடைந்திருந்த முட்டையின் விலை மீண்டும் அதிகரித்து வருவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சில பகுதிகளில் முட்டையின் விலை 40 ரூபாய் வரை உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், சில நாட்களுக்கு முன்பு முட்டை விலை 30 ரூபாய்க்கும் குறைவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மின்சாரம் தாக்கி 2 சிறுவர்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக். 08

பண்டாரகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அடலுகம பகுதியில் மின்சாரம் தாக்கி இரு சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனரென பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 13 மற்றும் 12 வயதுடைய இரு சிறுவர்களே காயமடைந்துள்ளனர். காயமடைந்த சிறுவர்கள் இருவரும் பட்டம் விட்டு விளையாடிக்கொண்டிருக்கும் போது, பட்டம் வீதியில் உள்ள மின்கம்பத்தில் சிக்கியுள்ளது.

பின்னர், இரு சிறுவர்களும் தொடர்மாடி குடியிருப்பு ஒன்றின் மேல் மாடிக்குச் சென்று அலுமினிய கம்பி ஒன்றின் உதவியுடன் மின் கம்பத்தில் சிக்கியுள்ள பட்டத்தை எடுக்க முயன்றபோது மின்சாரம் தாக்கி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, பாதிக்கப்பட்ட இரு சிறுவர்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# சஜித்துக்கு ஆதரவளித்த சு.கவினரே இப்போது தேசிய மக்கள் சக்தி பக்கம்!

## மகிந்த அமரவீர கருத்து

கொழும்பு, ஒக். 08

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தவர்களே தற்போது தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளார். அவர்கள் சுதந்திர கட்சியில் எந்த பதவியையும் வகிக்கவில்லை என முன்னாள் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் பேச்சுவார்த்தைகள் அனைத்தையும் நிறைவு செய்துள்ளோம்.

அதற்கமைய பொதுத் தேர்தலிலும் சமையல் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடவுள்ளோம்.

விரைவில் எமது கூட்டணி வேட்புமனுவை தாக்கல் செய்யும்.

நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளிலும் வேட்பாளர்களைக் களமிறக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

பொதுத் தேர்தலின் பின்னர்



சுதந்திர கட்சியை மேலும் பலப்படுத்தி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவோம்-என்றார்.

(அ)

# இலங்கையில் இருந்த பாகிஸ்தான் கைதிகள் 54 பேர் சொந்த நாட்டுக்கு!

கொழும்பு, ஒக். 08

கைதிகள் பரிமாற்றச் சட்டத்தின் கீழ், இந்த நாட்டில் சிறையில் இருந்த 56 பாகிஸ்தான் கைதிகள் பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் கைதிகள் குழுவொன்று பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பாகிஸ்தானுக்குச் சொந்தமான விசேட விமானம் ஒன்றில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஐந்து பெண்களும் 51 ஆண்களும் நேற்று முன் தினம் அந்த நாட்டுக்குச் சென்றுள்ளனர்.

சிறைச்சாலைத் திணைக்கள வரலாற்றில் அதிகளவான கைதிகள் பரிமாற்றம் செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஆணையாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை மற்றும் பாகிஸ்தான் தூதரகம் ஆகியவற்றின் தலையீட்டுடன் இந்த கைதிகள் பரிமாற்றத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கைதிகளுக்கு வழங்கப்படும் சிறைத்தண்டனை அவர்களின் சொந்த நாட்டில் உள்ள சிறைகளில் வழங்கப்பட உள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி 6 ஆசனங்களுக்கு மேல் கைப்பற்றும்!

## தலைவர் மனோ கணேசன் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 08

**பொதுத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆறு ஆசனங்களுக்கு மேல் இம்முறை கைப்பற்றும் என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

"தமிழ் முற்போக்கு கூட்டணி இம்முறை கொழும்பு, நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை உள்ளிட்ட மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்தும்.

கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் இம்முறை பிரதிநிதித்துவத்தை வெல்வோம். கொழும்பு மாவட்டத்தில் இரண்டாவது பிரதிநிதித்துவத்தை பெறுவதற்குரிய சாத்தியமும் உள்ளது." - எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

அத்துடன், தான் ஊழல் அற்ற அரசியல்வாதி எனவும், தனது கரங்களில் கறை படியவில்லை எனவும் மனோ கூறினார்.



# அரச நிறுவனங்களின் நிர்வாக சபை கூட்டங்களை இடைநிறுத்தியது அரசு

கொழும்பு, ஒக். 08

நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் நிர்வாக சபை கூட்டங்களை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

இந்த காலகட்டத்தில் அந்த நிறுவனங்களின் தலைவர்கள் நிர்வாக ரீதியில் எந்த முடிவும் எடுக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

சில சபைகளுக்கு ஏற்கனவே புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் ஏனைய பணிப்பாளர் சபைகளுக்கு பொருத்தமான தலைவர்கள் அந்தந்த அமைச்சர்களால் நியமிக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

இதன்படி, தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் நிர்வாக சபைக் கூட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

புதிய தலைவர்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதானிகளை நியமிப்பது புதிய அமைச்சர்களின் கடமை என பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி சுட்டிக்காட்டினார். (அ)

# சி. ஐ. டிக்கு முதல் பெண் பணிப்பாளர்?

கொழும்பு, ஒக். 08

இலங்கை பொலிஸ்துறை வரலாற்றில் முதன்முறையாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக பெண் அதிகாரி ஒருவரை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றும் சிரேஷ்ட அத்தியட்சகர் இமேஷா முத்துமாலவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளதாக பொலிஸ் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை பொலிஸ் வரலாற்றில் 2007 ஆம் ஆண்டு உதவி அத்தியட்சகர்களாக பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட முதல் மூன்று பெண் உதவி அத்தியட்சகர்களில் இமேஷா முத்துமாலவும் ஒருவர். 2017 ஆம் ஆண்டு பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றார்.

அவர் றுகுணு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளங்கலை மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்ட இளங்கலை பட்டம் பெற்றுள்ளார். (அ)

# சில கட்சிகள் பொதுத் தேர்தலில் கூட்டணி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனிவழி!

கொழும்பு, ஒக். 08

பொதுத்தேர்தலின்போது கூட்டாகவும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின்போது தனி வழி செல்வதற்கும் சிலிண்டர் கூட்டணிக்கு ஆதரவளிக்கும் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இதன்படி பொதுத்தேர்தலில் கேஸ் சிலிண்டர் சின்னத்தின்கீழ் போட்டியிடவுள்ள சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபாலடி சில்வா அணி, உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் கை சின்னத்தில் களமிறங்கவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுத்தேர்தலில் காஸ் சிலிண்டர் சின்னத்திலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யானை சின்னத்திலும் போட்டியிட தீர்மானித்துள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுத்தேர்தலில் கூட்டணி அமைத்தும், உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் சேவல் சின்னத்திலும் களமிறங்கவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த சில தரப்புகள் பொதுத் தேர்தலில் தனிவழி செல்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈ.பி.டி.பி, தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தனித்து களமிறங்கவுள்ளன என்று தெரியவருகின்றது. (அ)

# சொத்துகள், கடன்கள் தொடர்பில் வேட்பாளர்கள் அறிவிக்க வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 08

எதிர்வரும் நவம்பர் 14, அன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும், 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க விடுத்துள்ள அறிக்கையில்-

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் தமது சொத்துப் பிரகடனங்களை வேட்புமனுவுடன் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசியப் பட்டியல் வேட்புமனுக்களை கோருபவர்களும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் 48 மணி நேரத்துக்குள் நிறைவுற வேண்டும்

## பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை



கொழும்பு, ஒக். 08

எதிர்வரும் காலங்களில் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக அன்றைய தினமே விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 48 மணித்தியாலங்களுக்குள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து சிறு முறைப்பாடுகளையும் அடுத்த இரண்டு வாரங்களில் விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# தேசிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்தால் பரிசீலிக்கத் தயார்!

## இராதாகிருஷ்ணன் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 08

"எமது மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும், எனவே, ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்தால் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும்." - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஊடக சந்திப்பொன்றின் போது அவரிடம் எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

"எமக்கு அழைப்பு விடுத்தால் அது தொடர்பில் கட்சியாக தமிழ் முற்போக்கு கூட்டணி பரிசீலிக்கும். நாம் அழைப்பை ஏற்க விரும்பம் எனக் கூறவில்லை. ஆனால் பரிசீலிக்க முடியும்.

மக்களுக்காக வரப்பிரசாதங்களை துறப்பதற்கு நான் தயார். எனக்கு வாழ்வதற்குரிய வருமான வழி உள்ளது. எனவே, அரசாங்கத்தால் வழங்கப்படும் சலுகைளைத் துறப்பதற்கு தயார்." - எனவும் இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஓய்வூதியம் நிறுத்தப்பட்டமை மூத்த குடிமக்களுக்கான அநீதி!

## முன்னாள் எம். பி. ரோஹினி

கொழும்பு, ஒக். 08

கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் ஓய்வூதியர்களுக்கு 3000 ரூபா தொகையை நிறுத்தியது மூத்த குடிமக்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதி என மாத்தளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில், ஜனாதிபதித் தேர்தலை காரணம் காட்டி தேர்தல் ஆணையம் ஓய்வூதியர்களுக்கு ஒகஸ்ட், செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் 9,000 ரூபா தொகையை நிறுத்தியுள்ளது.

ஒக்ரோபர் ஓய்வூதியத்துடன் உரிய பணம் வழங்கப்படும் என கூறப்பட்டு வந்த நிலையில், இந்த ஓய்வூதிய நாளில் பணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

பொதுத்தேர்தல் முடியும் வரை பணம் வழங்குவதை நிறுத்தி வைத்தால், ஓய்வூதியர்களுக்கு நான்கு மாதச் சம்பளமாக 12,000 ரூபா இழக்கப்படும்.

மேலும், பொதுத் தேர்தலின் முடிவில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டால், ஓய்வூதியர்களுக்கு இன்னும் மூன்று மாதங்களுக்கு வழங்க வேண்டிய பணம் கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளது-என்றுள்ளது. (அ)

# ஒலிபரப்பு கோபுரங்களில் செப்பு கம்பிகளை களவாடியவர் கைது!

கொழும்பு, ஒக். 08

மீரிகம ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள தொலைபேசி ஒலிபரப்பு கோபுரங்கள் மற்றும் மின்மாற்றிகள் ஆகியவற்றில் இருந்து செப்பு கம்பிகளை திருடிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீரிகம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட 457 அடி கம்பிகள் மற்றும் கம்பிகளை உருக்கி பெறப்பட்ட 40 கிலோ தாமிரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீரிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமானத்தை அதிகரிக்க மாநகர சபை நடவடிக்கை

## வருமான சேகரிப்பு உதவியாளர்கள் நியமனம்



கல்முனை, ஒக். 08

**கல்முனை மாநகர சபைக்கான வருமானங்களை அதிகரிப்பதற்கு விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வருமான சேகரிப்பு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

கல்முனை மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸின் ஆலோசனை, வழிகாட்டலில் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ்வின் நேரடி கண்காணிப்பில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லையினுள் மாநகர சபையின் வர்த்தக உரிமக் கட்டணம் மற்றும் சோலை வரி உள்ளிட்ட வருமானங்களை அறவீடு செய்வதற்காக வருமான பரிசோதகர்களுடன் இணைந்து செயல்படுவதற்காக வருமான சேகரிப்பு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் இலகுவாக அடையாளம் காண்பதற்காக மாநகர சபையால் விசேட அடையாள அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று மாநகர சபையில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் நௌபீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கணக்காளர், உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம், நிதி உதவியாளர் யூ. எம். இஸ்ஹாக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதன்போது வருமான சேகரிப்பு உதவியாளர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகளும், அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

வர்த்தகர்கள் தமது வியாபார நிறுவனங்களுக்கான வர்த்தக உரிமம் பெறுவதற்கான கட்டணங்கள் உள்ளிட்ட வரிகளை வருமான பரிசோதகர்களுடன் வருகின்ற குறித்த வருமான சேகரிப்பு உதவியாளர்களிடம் செலுத்தி உரிய பற்றுச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் கால நேர விரயங்களையும் தேவையற்ற அசௌகரியங்களையும் தவிர்த்து கொள்ள முடியும் என்று கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் தெரிவித்தார்.

இதேவேளை தம்மால் செலுத்தப்பட்ட கட்டணங்கள், வரிகள் எதுவாயினும் வரவு வைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்வதற்கான வசதிகள் மாநகர சபையின் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்டுள்ள நிதிப் பிரிவின் முகப்பு அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கணினி உள்ளீடுகளுக்கு மேலதிகமாக புத்தகப் பதிவேடுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. வர்த்தகர்கள், பொது மக்கள் எவராயினும் அலுவலக நேரத்தில் நேரடியாக வந்து இவற்றை பரீட்சிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)



# அக்கரைப்பற்றில் ஆசிரியர் தினம்

அக்கரைப்பற்று, ஒக். 08

சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் உயர்தர கலைப்பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர் தின நிகழ்வில் அதிபர் ஏ. எச். பௌஸ் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (எ)



# விபுலானந்த மாணவர்களுக்கு உளவள செயல்பாடு செயலமர்வு

காரைதீவு, ஒக். 08

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான உளவள செயல்பாடு தொடர்பான செயலமர்வு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவரும் சம்மாந்துறை ஆதார மருத்துவனையின் அத்தியட்சகருமான தர்மலிங்கம் பிரபாசங்கர் தலைமையிலான மருத்துவ குழுவினர் இந்த செயலமர்வை நடத்தினர்.

மருத்துவ அதிகாரிகளான நௌபல், கசுன் ஆகியோர் வளவாளர்களாக செயல்பட்டனர்.

மாணவர்கள் மத்தியில் பரீட்சை காலத்தில் ஏற்படுகின்ற மன அழுத்தங்கள் மற்றும் உள நெருக்கடிகள் என்பனவற்றை கையாளும் வழிமுறைகள் தொடர்பில் இதன்போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (எ)



# குப்பை மேட்டில் உயிரிழந்த யானை குறித்து விசாரணை

கல்முனை, ஒக். 08

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்தின் அருகில் இறந்து கிடக்கும் யானை தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை குறித்த யானை அப்பகுதியில் குவிந்துள்ள குப்பைகளை உண்ட நிலையில் திடீரென உயிரிழந்தது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு பொலிஸார், வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் யானையின் இறப்புக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் வெளியாகவில்லை. அத்துடன் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த யானையின் மரணம் தொடர்பான காரணத்தை உடற்கூற்று மருத்துவ பரிசோதனையின் பின்னரே அறிய முடியும் என தெரிவித்தனர்.

மேலும், இப்பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளில் உணவுதேடி தினந்தோறும் 10இற்கும் மேற்பட்ட யானைகள் வருகை தருவதுடன் அருகில் உள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன. அம்பாறை நகரப்பகுதி உள்ளிட்ட ஏனைய புற நகரப் பிரதேசங்களில் இருந்து இப்பகுதிக்கு குப்பைகள் மாநகர மற்றும் பிரதேச சபையின் வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு கொட்டப்படுகின்றன.

இதனால், அம்பாறை நகரில் இருந்து குப்பைகள் வாகனங்கள் மூலம் தினமும் கொண்டுவரப்பட்டு கொட்டப்படுகின்றதுடன் மலைபோல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகின்றன.

# ஆய்வுகூட வளங்கள், பரிசோதனைகளை வலுப்படுத்தல் குறித்து கலந்துரையாடல்



கல்முனை, ஒக். 08

சுகாதார அமைச்சால் புத்தாக்க சிந்தனை திறன் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கல்முனை பிராந்திய ஆய்வுகூடத்தின் வளங்கள் மற்றும் பரிசோதனைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்றது

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரி எம். சீ. எம். மாஹிரின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள், பிரதேச மருத்துவ அதிகாரிகள், ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவின் பொறுப்பு மருத்துவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது பிராந்திய ஆய்வு கூடத்தின் பொறுப்பதிகாரி என். எம். இப்ஹாம், விளக்கக் காட்சியுடன் கூடிய தரவுகளை முன்வைத்து பல விடயங்களையும் அதன் கட்டமைப்பு மற்றும் தொழில்பாடுகளையும் விரிவாக தெளிவுபடுத்தினார். (எ)

# இளைஞர் அமைப்பின் ரி - சேட் அறிமுக விழா

அம்பாறை, ஒக். 08

கிழக்கு இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் ரி சேட் அறிமுக விழா சீ பிரீஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அந்த அமைப்பின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும், மயோன் கல்வித் திட்ட சமூக அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அங்கத்தவர்களுக்கு ரி சேட்களை வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 நாட்களுக்குள் 4,000 பேர் லெபனானில் கொன்று குவிப்பு!

பெய்ரூட், ஒக். 08

**செப்ரெம்பர் 23ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 7ஆம் திகதிக்கும் இடைப்பட்ட 15 நாட்களுக்குள் இஸ்ரேல் இராணுவம் உள்ளிட்ட படைகளின் தாக்குதல்களால் லெபனானில் 4,000 பேர் உயிரிழந்தனர்.**

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் விமானப் படை கடந்த 27ஆம் திகதி நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தார். இதன் பிறகு இரு தரப்புக்கும் இடையிலான போர் தீவிரமடைந்தது.

இஸ்ரேல் விமானப் படை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் 2,000இற்கும் மேற்பட்ட முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன. 440 ஹிஸ்புல்லா போராளிகள் கொல்லப்பட்டனர். இஸ்ரேல் தாக்குதலில் லெபனான் முழுவதும் 4,000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 3,100இற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் தரைமட்டமாகின.

இஸ்ரேல் போர் விமானங்கள், ட்ரோன்களின் தாக்குதலுக்கு அஞ்சி லெபனான் மக்கள் அண்டை நாடான சிரியாவுக்கு தப்பிச் செல்கின்றனர். பெய்ரூட் - டமாஸ்கஸ் வீதியிலுள்ள முக்கிய பாலங்கள் மற்றும் முக்கிய இடங்களை இஸ்ரேல் அழித்ததால் லெபனான் மக்கள் சிரியாவுக்கு தப்பிச் செல்ல முடியாத சூழல் உருவாகியுள்ளது.

இஸ்ரேல் எல்லையை ஒட்டிய லெபனான் பகுதிகளில் ஹிஸ்புல்லா போராளிகள் சுரங்கப் பாதைகளில் இருந்து இஸ்ரேலை குறிவைத்து அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர்.

தற்போது லெபனான் எல்லைக்குள் தரைவழியாக நுழைந்துள்ள இஸ்ரேல் படையினர் சுரங்கப் பாதைகளை கண்டறிந்து குண்டுகள் மூலம் தகர்த்து வருகின்றனர். கடந்த சனிக்கிழமை 250 மீற்றர் நீளம் கொண்ட சுரங்கப்பாதை கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ஹிஸ்புல்லா அமைப்பினர் வெடிகுண்டுகள், ஏவுகணைகளை பதுக்கி வைத்திருந்தனர். அவை பறிமுதல் செய்யப்பட்டன என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் இனிமேல் வழங்கப்படாது

## பிரான்ஸ் ஜனாதிபதி திட்டவட்டம்



பாரிஸ், ஒக். 08

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை பிரான்ஸ் நிறுத்தியுள்ளதாகவும் மற்ற நாடுகளும் ஆயுத விநியோகத்தை நிறுத்த வேண்டும் என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்தார்.

பலஸ்தீனத்தில் நிலைகொண்டுள்ள ஹமாஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள காஸா மீது இஸ்ரேல் போரை தொடங்கி இன்றுடன் ஓர் ஆண்டாகிறது. இந்தப் போர் தொடங்கிய நாளில் இருந்து லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பினர் ஹமாஸுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

இந்த நிலையில், பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையின்படி கடந்த ஆண்டு மட்டும் 30 மில்லியன் யூரோக்கள் மதிப்பில் ஆயுதங்களை இஸ்ரேலுக்கு பிரான்ஸ் வழங்கியுள்ளது. ஆனால், இஸ்ரேல் அதிகளவில் ஆயுதங்கள் வழங்கும் முதன்மை நாடாக பிரான்ஸ் இருந்ததில்லை. இன்றைய அரசியல் ரீதியான தீர்வுக்கு என்ன தேவை என்றால் காஸாவில் நடத்தப்படும் போருக்குத் தேவையான ஆயுதங்கள் வழங்குவது நிறுத்தப் பட வேண்டும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி கூறினார். (எ)



# தமிழுக்கு பெருமை சேர்த்த விமான படை சாகச நிகழ்ச்சி

சென்னை, ஒக். 08

சென்னையில் நடைபெற்ற விமான சாகச நிகழ்ச்சிக்கு அழகான தமிழ் பெயர்கள் சூட்டப்பட்டன. இதன் மூலம் தமிழுக்கு பெருமை சேர்க்கப்பட்டுள்ளது.

இதில், ஒவ்வொரு சாகச நிகழ்ச்சிக்கும் அழகான தமிழ்ப் பெயர்கள் சூட்டப்பட்டன. சங்கம், சேரன், சோழன், பல்லவர், காவேரி, காஞ்சி, நட்ராஜ் ஆகிய தமிழ்ப் பெயர்கள் சூட்டப்பட்டன. அத்துடன், ஒவ்வொரு சாகச நிகழ்ச்சியின் போதும் திரைப்பட பாடல்கள் இசைக்கப்பட்டு பார்வையாளர்களை உற்சாகப்படுத்தினர்.

குறிப்பாக, தேஜஸ் விமான சாகச நிகழ்ச்சியின் போது கபாலி திரைப்படத்தில் இடம்பெற்ற "நெருப்புடா" என்ற பாடல் இசைக்கப்பட்டது. (எ)

# "கடவுளின் உதவியால் வெற்றி நமக்கே" இஸ்ரேல் படையினரிடம் பிரதமர் உறுதி

டெல் அவிவ், ஒக். 08

"ஒன்றிணைந்து போராடுவோம். கடவுளின் உதவியால் வெற்றி நமக்கே"- இவ்வாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அந்நாட்டு படையினரிடம் நேரில் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்குள் நுழைந்து ஹமாஸ் போராளிகள் தாக்குதல் நடத்தி நேற்றுடன் ஓராண்டு நிறைவடைந்தது. இதனை முன்னிட்டு லெபனான் எல்லையில் போரிடும் இஸ்ரேல் இராணுவ முகாம்களை பிரதமர் நெதன்யாகு பார்வையிட்டார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் அவர் கூறியவை வருமாறு, "வடக்கு எல்லையில் இருக்கும் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினரை சந்தித்தேன். அங்கிருந்து சில மீற்றர்கள் தொலைவில் எல்லைக் கோட்டுக்கு அப்பால், அவர்களின் நண்பர்கள், ஹிஸ்புல்லா அமைப்பினர் எங்களுடைய முகாம்களை தாக்குவதற்காக தயார் செய்த உட்கட்டமைப்புகளை தகர்த்துக் கொண்டிருக்கின்றனர்.




நான் அவர்களிடம் சொன்னேன் நீங்கள்தான் வெற்றி நாயகர்கள். நீங்களும் உங்கள் நண்பர்களான இஸ்ரேல் பாதுகாப்புப் படையினரும், காஸாவில் உள்ள படையினரும் அற்புதங்களை உருவாக்குகிறீர்கள். நீங்கள் சிங்கங்களைப் போன்றவர்கள்.

ஓராண்டுக்கு முன்பு நாம் மிகப்பெரிய தாக்குதலுக்கு உள்ளானோம். கடந்த 12 மாதங்களில் நாம் ஜதார்த்தத்தை முழுமையாக மாற்றியிருக்கிறோம். நமது எதிரிகளின் மீது நீங்கள் கட்டவிழ்க்கும் தாக்குதலைக் கண்டு ஒட்டுமொத்த உலகமும் சிரிக்கிறது. வெற்றியின் தலைமுறையினர் நீங்கள் என்பதை நான் உங்களிடம் சொல்லிக் கொள்கிறேன். ஒன்றிணைந்து போராடுவோம். கடவுளின் உதவியால் வெற்றி நமக்கே"- இவ்வாறு நெதன்யாகு தெரிவித்துள்ளார். (எ)

# ஹமாஸ் ஆயுதங்களை கொண்டு இஸ்ரேல் இராணுவம் கண்காட்சி

டெல் அவிவ், ஒக். 08

ஹமாஸ் அமைப்பிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட வெடிபொருட்களைக் கொண்டு இஸ்ரேல் கண்காட்சி நடத்தியுள்ளது.





இஸ்ரேல் மீது 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் கொடூரத் தாக்குதல் நடத்தியது. இதில், அந்த நாட்டு எல்லைப் பகுதியில் இசை கச்சேரியில் பங்கேற்க வந்த இஸ்ரேல் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். அவர்களில் ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்தும், நூற்றுக்கணக்கானோரை பணய கைதிகளாக சிறை பிடித்தும் சென்றனர்.

இந்த நிலையில், இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்தி ஓராண்டு நிறைவடைந்துள்ள சூழலில், அந்த அமைப்பிடம் இருந்து பறிமுதல் செய்த வெடிபொருட்களைக்கொண்டு இஸ்ரேல் கண்காட்சி நடத்தியுள்ளது.

இதுபற்றி இஸ்ரேல் படையினர் வெளியிட்டுள்ள செய்தியில், எதிரிகளின் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெடிபொருட்களை முடக்கியிருக்கிறோம். பீரங்கிகளை அழிக்கும் 1,250 ஏவுகணைகள் மற்றும் ரொக்கெட் எறி குண்டுகள் மற்றும் 4,500 வெடி பொருள் உபகரணங்கள் உள்ளிட்டவையும் இதில் அடங்கும் என தெரிவித்துள்ளது. (எ)



# விமான சாகசத்தால் ஐவர் உயிரிழந்தனர்

சென்னை, ஒக். 08

இந்திய விமானப் படையின் 92ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விமான சாகச நிகழ்ச்சிக்காக சுமார் 15 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் குவிந்தனர். இதில் வெயில், நெரிசலால் 240 பேர் மயக்கமடைந்த நிலையில், சிகிச்சை பலனின்றி ஐவர் உயிரிழந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா அசத்தல் வெற்றி

குவாலியர், ஒக். 08

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ரி - 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

குவாலியரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் சூர்யகுமார் யாதவ், முதலில் பந்து வீச முடிவு செய்தார். இந்திய அணியில் மயங்க் யாதவ் மற்றும் நிதிஷ் ரெட்டி ஆகியோர் இந்தப் போட்டியில் அறிமுக வீரர்களாக களம் கண்டனர். சுமார் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு வருண் சக்கரவர்த்தி சர்வதேச போட்டியில் விளையாடினார்.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 19. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 127 ஓட்டங்கள் எடுத்தது. மெஹிதி ஹசன் மிராஸ் 35 மற்றும் ஷான்டோ 27 ஓட்டங்கள் எடுத்தனர். அர்ஷ்தீப் மற்றும் வருண் தலா மூன்று விக்கெட்கள் வீழ்த்தினர். ஹர்திக், மயங்க் மற்றும் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

128 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இந்தியா விரட்டியது. சஞ்சு சாம்சன் மற்றும் அபிஷேக் சர்மா இணைந்து இன்னிங்ஸை ஆரம்பித்தனர். 7 பந்துகளில் 16 ஓட்டங்கள் எடுத்து அபிஷேக் ஆட்டமிழந்தார். சூர்யகுமார் யாதவ், 14 பந்துகளில் 29 ஓட்டங்கள் சேர்த்து



ஆட்டமிழந்தார். சஞ்சு சாம்சனும் 29 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

ஹர்திக் பாண்டியா 16 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். நிதிஷ் ரெட்டி தனது முதல் போட்டியில் ஒரு சிக்ஸருடன் 16 ஓட்டங்கள் எடுத்தார். இந்த நிலையில், 11. 5 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 132 ஓட்டங்கள் எடுத்து இந்திய அணி வெற்றி பெற்றது. (எ)

## "ரிஸ்வான் மட்டுமே ஒரே தெரிவு"



இஸ்லாமாபாத், ஒக். 08

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து பாபர் அஸாம் விலகியதையடுத்து அடுத்த தலைவரை தெரிவு செய்வதற்கு அனைவரையும் முயற்சி செய்து விட்ட நிலையில் முகமது ரிஸ்வான் மட்டுமே இன்னும் தெரிவு செய்யப்படவில்லை என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தொடக்க வீரர் முடாசர் நாசர் தெரிவித்தார்.

ஆனால், முகமது ரிஸ்வான் மீது சக வீரர்களுக்கோ, அணி நிர்வாகத்துக்கோ அவ்வளவு திருப்தியில்லை என்பதையும் முடாசர் நாசர் சுட்டிக்காட்டத் தயங்கவில்லை.

ரிஸ்வானைத் தவிர அனைவரையும் முயற்சி செய்தாகி விட்டது. இனி ரிஸ்வானைத்தான் அவர்கள் தலைவராக்க முடியும்.

இல்லையெனில் இன்னொரு இளம் வீரரைத் தெரிவு செய்தால் பாபர் அஸாமுக்கு நடந்ததுதான் நடக்கும். எனவே, சிரேஷ்ட வீரர் ஒருவரை தலைவராக்கி அவர் தலைமையில் இளம் வீரர் ஒருவரை தலைமைத்துவத்துக்கு தயார்படுத்த வேண்டும். என்னைப் பொறுத்தவரை 3 வடிவங்களுக்குமே ரிஸ்வானை தலைவராக்கினால் நல்லது என்றுதான் கருதுகிறேன்"- என்றார். (எ)



6 விக்கெட் வித்தியாசத்தில்

## பாகிஸ்தானை வீழ்த்தி இந்திய மகளிர் வெற்றி

டுபாய், ஒக். 08

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ரி - 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய மகளிர் அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் 9ஆவது ஐ. சி. சி. மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் நியூசிலாந்திடம் தோல்வியடைந்தது.

இந்த நிலையில் இந்திய அணி நேற்று முன்தினம் பாகிஸ்தான் அணியுடன் மோதியது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியால் 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 105 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக நிடா தார் 28, முனீபா அலி 17, சயீடா அரோப் ஷா 14, பாத்திமா சனா 13 ஓட்டங்கள் சேர்த்தனர். இந்திய அணி தரப்பில் அருந்ததி ரெட்டி 3 விக்கெட்களையும், ஸ்ரேயங்கா பாட்டீல் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். ரேணுகா சிங், தீப்தி சர்மா, ஆஷா ஷோபனா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து, 106 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 18. 5 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 108 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தத் தொடரில் இந்திய அணிக்கு இது முதல் வெற்றியாக அமைந்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஷபாலி வர்மா 35 பந்துகளில் 32 ஓட்டங்களும் ஹர்மன் பிரீத் கவுர் 24 பந்துகளில் 29 ஓட்டங்களும் ஜெமிமா ரோட்ரிக்ஸ் 28 பந்துகளில் 23 ஓட்டங்களும் சேர்த்தனர்.


இந்திய அணி தனது அடுத்த ஆட்டத்தில் நாளை 9ஆம் திகதி இலங்கை அணியுடன் மோதுகிறது. இந்த ஆட்டம் டுபாயில் இரவு 7. 30 மணிக்கு நடைபெறுகிறது.

## "அனைத்து வடிவ கிரிக்கெட்டிலும் சிறந்து விளங்கும் ட்ராவிஸ் ஹெட்"

புதுடில்லி, ஒக். 08

"ரி - 20, ஒரு நாள், டெஸ்ட் என்று அனைத்து வடிவ கிரிக்கெட் போட்டிகளிலும் அவுஸ்திரேலியாவின் ட்ராவிஸ் ஹெட் சிறந்த வீரராக திகழ்கின்றார்"- இவ்வாறு இந்திய அணியின் முன்னாள் வீரர் தினேஷ் கார்த்திக் தெரிவித்தார்.

கிரிக்கெட் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் தினேஷ் கார்த்திக் பங்கேற்றார். அப்போது அவரிடம் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் யார் என்று கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த தினேஷ் கார்த்திக், அவுஸ்திரேலியாவின் ட்ராவிஸ் ஹெட் கொஞ்சம் முன்னால் இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். ஜெய்ஸ்வால் சிறப்பாக விளையாடுகிறார். ஆனால், இன்னும் அவருக்கு ஒரு நாள் கிரிக்கெட் வடிவத்தில் விளை யாடும் வாய்ப்பு



கொடுக்கப்படவில்லை. எனவே, இந்த நேரத்தில் மூன்று வடிவ கிரிக்கெட்டிலும் ஹெட் சிறந்த துடுப்பாட்ட வீரராக இருக்கிறார் என்று நான் கூறுவேன் - என்றார். (எ)



டுபாய், ஒக். 08

ஸ்கொட்லாந்துக்கு எதிரான மகளிர் ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற இந்தப்

## மேற்கு இந்திய தீவுகள் மகளிர் அணி அபாரம்

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த ஸ்கொட்லாந்து கடும் சிரமத்துக்கு மத்தியில் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 98 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 11. 4 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

அந்த அணி சார்பில் மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடிய கியானா ஜோசப் 18 பந்துகளில் 3 31 ஓட்டங்களைப் பெற்றார்.

பின்னர் டியேந்த்ரா டொட்டின், சினெலி ஹென்றி ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 5ஆவது விக்கெட்டில் 42 ஓட்டங்களைப் பகிர்ந்து மேற்கு இந்திய தீவுகளின் வெற்றியை 12ஆவது ஓவரில் உறுதிசெய்தனர். (எ)



## இங்கிலாந்துடன் முதல் டெஸ்ட்; பாகிஸ்தான் அணி ஆதிக்கம்!

முல்தான், ஒக். 08

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 284 ஓட்டங்கள் குவித்துள்ளது. அந்த அணியின் ஷான் மசூத் 151 ஓட்டங்களையும் அப்துல்லா ஷபீக் 102 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்தத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி முல்தான் நகரில் நேற்றுக் காலை ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (எ)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று மதியம் இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் தேசியக் கட்டமைப்பு சார்பாக சங்குச் சின்னத்தில் நாங்கள் போட்டியிடுகின்றோம். வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நாங்கள் தெரிவு செய்துள்ளோம்.

அம்பாறை மற்றும் திருகோணமலை பிரதேசங்களில் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான ஒப்புதலை வழங்கி உள்ளோம்.

தென்பகுதி மக்கள் அங்குள்ள அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊழலுக்கு எதிராக ஜே.வி.பி கட்சிக்கு வாக்களித்துள்ளனர். அந்த அலை தற்போது எங்களிடம் பரவியுள்ளது.

ஜே. வி. பியுடன் இணைந்து போட்டியிடுவதில் எமது இளைஞர்கள் ஆர்வத்துடன் இருக்கின்றனர்.

ஜே. வி. பி. தமிழ் மக்களின் இனப் பிரச்னையை தீர்க்கின்ற, அல்லது தீர்த்துவிடும் என்கிற நம்பிக்கை எனக்கில்லை.

அவர்கள் தற்போது தேர்தல் ஆசனங்களைக் கூடுதலாக கைப்பற்றவேண்டும் என்று சில நடவடிக்கைகளை எடுக்கின்றனர்.

அந்த வகையில், எமது இனப் பிரச்னையாக இருக்கலாம்,எமது நிலங்கள் அபகரிக்கப்படுகின்ற விடயங்களாக இருக்கலாம், கடந்த காலங்களில் அனுபவித்த துப்பாக்கிச் சத்தங்கள் இல்லாத எமது தேசத்தை அனுபவிக்கின்ற நிலைப்பாடுகளை இந்த ஜே. வி. பி. அரசாங்கம் நிறுத்துமா? என்கிற கேள்வி இருக்கிறது - என்றார். (அ)

## வடக்கு சுற்றுலா...

அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோவை நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இதுவரை முன்னெடுக்கப்பட்டுவரும் அனைத்து ஒப்பந்தங்களும் அவ்வண்ணமே முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ தெரிவித்தார். அத்துடன் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்காக சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு அவசியமான வசதிகளுக்கான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

இதன்படி சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மேம்படுத்த உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ இணக்கம் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கையில் வலுவச்தி மற்றும் சிறு தொழில் முயற்சிகளை மேம்படுத்த தேவையான நிதி உதவிகளை வழங்கவும் நிதித் துறையின் முன்னேற்றத்துக்கு தேவையான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இதில் இலங்கைக்கான முன்னெடுப்புக்களின் பிரதானி சொல்பொத் மெம்பேடோவா, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பணிப்பாளர் நாயகம் டீ.ஏ.பி.அபேசேகர, பணிப்பாளர் உதேனி உடுகஹபத்துவ, சிரேஷ்ட பொருளாதார அதிகாரிகளான ஹஷிதா விக்ரமசிங்க மற்றும் லக்ஷினி பெர்னாண்டோ ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (அ)

## ஐ. த. தே. கூட்ட...

மாமனிதர் ரவிராஜின் மனைவி சசிகலா போட்டியிடவுள்ளார்.

இந்த நிலையில், பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவில் நேற்றைய தினம் அவர் கையெழுத்திட்டார்.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலொ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன், சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஞா. கிஷோர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

## நெல்லியடி...

புதன்கிழமை இரவு வாள்களுடன் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் புடைவையகத்துக்கு தீ வைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை காங்கேசன்துறை குற்றதடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்படும் போது வாள் ஒன்றும் பெற்றோல் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் காங்கேசன்துறை குற்றத் தடுப்பு பொலிஸார் ஒப்படைத்துள்ளனர். (அ)

## த. தே. ம. மு...

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் 'சைக்கிள்' சின்னத்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் விவரம் வருமாறு-

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், கனகரட்னம் சுகாஷ், நடராஜர் காண்டீபன், வாசுகி சுதாகரன், ஜெகதீஸ்வரன், க.ஞான குணேஸ்வரி, மேவிஸ் ஜீன்சியா, எம். நடனதேவன். (அ-05)

## ஈ. பி. டி. பி...

வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் குறித்த வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா-

வடக்கின் ஐந்து மாவட்டங்கள், கிழக்கில் மூன்று மாவட்டங்கள், கொழும்பு உள்ளடங்கலாக ஒன்பது மாவட்டங்களில் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் ஈ. பி. டி. பி. தனது சின்னமான வீணை சின்னத்தில் போட்டியிடவுள்ளது என குறிப்பிட்டார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் கொழும்பில் இம்முறை ஈ.பி.டி.பி போட்டியிடுவதற்கு விசேட காரணங்கள் ஏதும் உண்டா என கேட்டபோது,

கொழும்பிலுள்ள எமது கட்சியின் ஆதரவாளர்கள் கொழுப்பிலும் போட்டியிடுமாறு கோரிக்கை விடுத்து வந்திருந்தனர். அவர்களது கோரிக்கையின் அடிப்படையில் இம்முறை அந்த மாவட்டத்திலும் போட்டியிடுகின்றது ஈ.பி.டி.பி.

இதேநேரம் ஈ.பி.டி.பி ஆரம்ப காலம் முதற்கொண்டு தொடர்ச்சியாக கூறிவருகின்ற தேசிய நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் அதை வலுப்படுத்தும் நோக்குடன் கொழும்பு மாவட்டம் பல்லின பல மொழி பேசும் மக்கள் வாழும் இடமாக இருப்பதனால் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வகையில் வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். - என்றார். (அ-05)

# பலமான வர்த்தகர்களை அச்சுறுத்துகின்றது அரசு!

## சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 08

நாட்டின் பலமான வர்த்தகர்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் மிகவும் திட்டமிட்டு அச்சுறுத்தல் விடுத்து வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் ஊடக கண்காட்சிகளை நடத்தலாம். அப்போது அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அரசாங்கத்தை எப்படி வேண்டுமானாலும் குற்றம் சொல்லலாம்.

சமீப காலமாக இந்த நாட்டு வாக்காளர்கள் நீண்ட காலமாக சுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுகளை நம்பத் தொடங்கியிருப்பதை நாம் காண்கிறோம்.

ஆனால் அரச அதிகாரத்தைப் பெறுவதற்கு என்ன பொய்களைப் பயன்படுத்தினாலும், அந்த அரச அதிகாரம் கிடைத்தவுடன், பொய் சொல்லி அரச அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது என்பது நம்பிக்கை.

மற்றவர்களை விமர்சித்து, எதிர்க்கட்சித் தலைவர்களை விமர்சித்து, ஊடக நிகழ்ச்சிகளை போட்டு ஆட்சியை நடத்த முடியாது.

கடந்த தேர்தலின்போது பல்வேறு காரணங்களால் பல பேக்கரிகள் மூடப்பட்டன. முட்டை விற்பனையின்றி முட்டை விலை குறைந்துள்ளது.

ஜே.வி.பி. தலைவர்கள் வந்து செய்தியாளர் சந்திப்பு நடத்தி அமைச்சர்களுக்கு கொடுக்கப்படும் கொமிஷன் நிறுத்தப்பட்டதால் முட்டை விலை குறைக்கப்பட்டதாக அறிவித்தனர்.

ஆனால் நேற்றைய நிலவரப்படி முட்டை விலை மீண்டும் அதிகரித்துள்ளது. இப்போது ரூபா 10.00 முதல் அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி உடனடியாக ஆராய்ந்து இந்த 1000 ரூபாயை கமிஷன் வாங்குபவர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நீங்கள் சொன்னது போல் அமைச்சர்கள் கமிஷன் வாங்கியதால் முட்டை விலை உயர்ந்தது, நீங்கள் வாங்குவதை நிறுத்தியதால் குறைந்துள்ளது, ஆனால் உங்கள் சொந்த அரசாங்கத்தில் ஒருவர் இந்த முட்டை விற்பனையாளர்களிடம் கொமிஷன் வாங்கத் தொடங்கியதால் இப்போது அது மீண்டும் அதிகரித்துள்ளது-என்றார். (அ)

# மட்டக்களப்பில் 17 சுயேச்சைக்குழுக்கள்!

மட்டக்களப்பு, ஒக். 08

பொதுத் தேர்தலுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 17 சுயேச்சைக் குழுக்கள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. இதேவேளை, இரண்டு சுயேச்சைக்குழுக்கள் மற்றும் ஓர் அரசியல் கட்சி இதுவரை வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளதாக மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர் திருமதி ஜே. ஜே. முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 4 இலட்சத்து 69,686 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் 442 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அரசாங்க உத்தியோகத்தர்கள் இன்று தங்களது தபால் வாக்குகளுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் - என்றார். (எ)

## மாவை அனுப்பிய...

கட்சியின் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் விலகியுள்ளதாகவும் உறுப்புரிமையில் மாத்திரம் தமிழ் அரசுக் கட்சியில் இருப்பேன் எனவும் தெரிவித்ததோடு இது தொடர்பில் கட்சியின் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் கூறினார்.

இது தொடர்பில் சத்தியலிங்கத்திடம் கேட்டபோது, "எனக்கு எந்தவிதமான கடிதமும் இதுவரை கிடைக்கவில்லை"- என்றார். (எ)

## உலக வங்கி...

முன்னிலையில் நிதி அமைச்சின் செயலாளர் கே. எம். மஹிந்த சிறிவர்த்தன மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டேவிட் சிஸ்லேன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்த நிதி வசதியானது இலங்கையின் முன்னெடுக்கப்படும் விரிவான மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு உலக வங்கியின் தொடர்ச்சியான ஒத்துழைப்பை காண்பிக்கிறது.

இலங்கையின் மறுசீரமைப்பு, நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை சுமூக நிலைக்கு கொண்டு வருவதற்கான அபிவிருத்தி கொள்கைகளுக்கு நிதியளிக்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் இந்த நிதி உதவி இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டம் 2023 ஆண்டில் செயற்படுத்தப்பட்டதுடன், பிரதான மூன்று துறைகளின் கீழ் ஏழு வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்ட பின்னர், 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும். (அ)

## கட்டுமரம்...

கோவிலடி, தும்பளையைச் சேர்ந்த திருச்செல்வம் ஞானப்பிரகாசம் (வயது-69) என்பவராவார்.

நேற்றுத் திங்கட்கிழமை காலை 7: 30 மணியளவில் கடலுக்கு மீன்பிடிப்பதற்காக கட்டுமரத்தில் சென்றார். கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அவர் சென்ற கட்டுமரம் கடல் கொந்தளிப்பு காரணமாக புரண்டது.

கடலில் மூழ்கி உயிரிழந்த மீனவரின் சடலத்தை மீட்ட சக மீனவர்கள் உடலை கரைக்கு கொண்டு வந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

இவரது மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். (எ-02)

## விலகினார்...

தேசியக் கூட்டணியில் அங்கத்துவம் வகிப்பதுடன் சங்குச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இதில், அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்துக்கு ஏற்ப இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் வழிவிடும் முகமாக இம்முறை தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்குத் தான் தீர்மானித்துள்ளார் என்று சிவசக்தி ஆனந்தன் அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## இழப்பீட்டை முழுமையாக செலுத்தினார் நிலாந்த

கொழும்பு, ஒக். 08

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதிமன்றம் உத்தரவிட்ட இழப்பீட்டு தொகையில் 65 மில்லியனை செலுத்தியுள்ளாரென தேசிய புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் நிலாந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தனது சட்டத்தரணி ஊடாக அவர் இதனை நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயப்பட்ட அடிப்படை மனுவை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் நிலாந்த ஜெயவர்த்தன 75 மில்லியன் ரூபாய்களை செலுத்தவேண்டும் என உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் முன்னர் 10 மில்லியன் ரூபாயை செலுத்தியிருந்ததாக நிலாந்த ஜெயவர்த்தன தெரிவித்திருந்தார். தற்போது 65 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ள நிலையில் அவர் முழு இழப்பீட்டுத் தொகையையும் செலுத்தி முடித்துள்ளார்.

ஜனவரி 23ஆம் திகதி உயர்நீதிமன்றம் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு இழப்பீடாக அரசாங்கம் ஒரு மில்லியன் ரூபாவை செலுத்தவேண்டும் என உத்தரவிட்டிருந்தது. (அ)

## கொழும்பில் அதிக மழை!

கொழும்பு, ஒக். 08

கடந்த சில மணித்தியாலங்களில் கொழும்பு பிரதேசத்தில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அதன்படி, குறித்த காலப்பகுதியில் கொழும்பில் 162.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் காலை 8.30 முதல் நேற்று காலை 7 மணி வரையான காலப்பகுதியில் ஹொறணையில் 111 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், நெலுவ பிரதேசத்தில் 109 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் தென்மேற்கு பகுதிகளில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை எதிர்வரும் தினங்களுக்கும் தொடரும் என அந்த திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (அ)

## தொலைக்காட்சி நாடக நடிகர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, ஒக். 08

ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த தொலைக்காட்சி நாடக நடிகர் ஒருவர் பொலிஸாருக்கு 10 இலட்சம் ரூபாய் இலஞ்சம் வழங்கி தப்பிச் செல்ல முற்பட்டவேளை தனமல்வில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 26 வயதுடைய தொலைக்காட்சி நாடக நடிகர் ஆவார்.

சந்தேக நபர் வெள்ளவாய நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் 11 ஆம் திகதி வரை மேலதிக விசாரணைகளுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தன்னை கைது செய்யாமல் இருக்க தனமல்வில தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.பி பண்டாரவுக்கு 10 இலட்சம் ரூபா வழங்க முற்பட்டுள்ளார்.

தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வழங்கிய தகவலின் பேரில் பொலிஸ் அதிகாரி குழு ஒன்று பலஹருவ பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டபோது 10 கிலோ 300 கிராம் ஐஸ் போதைப்பொருடன் சந்தேக நபரை கைது செய்துள்ளது.

இதேவேளை, தலைமன்னார் பகுதியில் 40 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுப்பட்டமை தொடர்பில் சந்தேக நபருக்கு எதிரான வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், அவருக்கு எதிரான சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# குற்றவாளிகளை பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாக நியமிக்கக்கூடாது



### பவ்ரல் அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 08

நீதிமன்றம் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டோரை பாராளுமன்ற தேர்தலில் வேட்பாளர்களாக நியமிக்கவேண்டாம் என தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீதிமன்றத்தினால் ஊழல் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தண்டனை விதிக்கப்பட்டவர்களை வேட்பாளர்களாக அரசியல் கட்சிகள் நியமிக்கக்கூடாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வோரை வேட்பாளர் பட்டியலில் சேர்த்தால் குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் பொதுமக்களுக்கு பதில் சொல்லவேண்டியிருக்கும் என அவர் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வன்முறையற்ற விதத்தில் இடம்பெற்றுள்ள சூழ்நிலையில் அரசியல் கட்சிகளை சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

தேசியப் பட்டியல் வேட்பாளர்களாக நியமிப்பதற்கு தகுதியானவர்களை அரசியல் கட்சிகள் தெரிவு செய்ய வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பட்டியலில் ஒரு வேண்டத்தகாத வேட்பாளர் நியமிக்கப்பட்டாலும் அது ஒட்டுமொத்த கட்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என ரோஹண ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## காலி சிறைச்சாலைக்குள் 52 கைபேசிகள் மீட்பு!

கொழும்பு, ஒக். 08

காலி சிறைச்சாலையின் இரண்டு கைதிகளின் அறிகளில் இருந்து 52 கைபேசிகள் மற்றும் சார்ஜர்கள், டேட்டா கேபிள்கள் உள்ளிட்ட பல பாகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக காலி சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலைப் புலனாய்வுப் பிரிவின் அவசர பதில் தந்திரோபாயப் பிரிவினரால் நேற்று முன்தினம் பிற்பகல் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கையின்போதே இவ்வாறு மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காலி சிறைச்சாலை வளாகத்தின் இரண்டு கட்டடங்களில் அதிகாரிகள் நேற்று முன்தினம் இந்த விசேட தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

கைபேசிகள் மற்றும் அவற்றுக்கு பயன்படுத்தப்படும் பல உபகரணங்களின் கையிருப்பு அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டுபிடிக்கப்பட்ட கைபேசிகளில் ஸ்மார்ட் போன்களும் உள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக கூறி மோசடி

கொழும்பு, ஒக். 08

ஜப்பானில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்தார் எனக் கூறப்படும் ஜப்பான் மொழி ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரணை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி வீதி, ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ஜப்பான் மொழி ஆசிரியரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஜப்பானில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக கூறி 39 இலட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபா மோசடி செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பின்னர், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹொரணை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# நிதி மோசடியில் ஈடுபட்ட 40 வெளிநாட்டவர்கள் குற்ற புலனாய்வு திணைக்களத்தினரால் கைது!

கொழும்பு, ஒக். 08

ஹங்வெல்ல மற்றும் கம்பஹா பகுதியில் நிதி மோசடியில் ஈடுபட்ட 40 வெளிநாட்டவர்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த திணைக்களத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே ஹங்வெல்ல பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமூக வலைத்தளங்கள் ஊடாக இவர்கள் நிதிமோசடியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்களில் சீனாவைச் சேர்ந்த 29 ஆண்களும் ஒரு பெண்ணும், இந்தியாவைச் சேர்ந்த 3 பெண்களும் ஒரு ஆணும், தாய்லாந்தைச் சேர்ந்த 2 ஆண்களும் 4 பெண்களும் அடங்குவரென பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தடயவியல் பரிசோதனைக்காக 499 கையடக்க தொலைபேசிகளும், 25 மடிக்கணினிகளும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் 307 பொலிஸாருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஒக். 08

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இருந்து நாடு முழுவதும் உள்ள பல்வேறு பொலிஸ் பிரிவுகளுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 307 பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.


பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் 258(1) மற்றும் (11)இன் படி தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலின் கீழ் இந்த இடமாற்றங்கள் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பணியிட மாற்றம் செய்யப்பட்டவர்களில் 11 தலைமை ஆய்வாளர்கள், 5 ஆய்வாளர்கள், 38 உப பொலிஸ் அதிகாரிகள் மற்றும் 12 பெண் உப பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் தற்காலிகமாக கடமையாற்றிய 24 பொலிஸாரின் இடமாற்ற உத்தரவு இரத்து செய்யப்பட்டுள்ளது. (அ)

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஈ - சிகரெட்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஒக். 08



சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குப் பெருந்தொகையான இலத்திரனியல் சிகரெட்களை கொண்டு வந்த வர்த்தகர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் இருந்து 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 1,105 இலத்திரனியல் சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு - பெரியமுல்ல பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே குறித்த இலத்திரனியல் சிகரெட்டுகளை நாட்டுக்குக் கொண்டு வந்துள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org